ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1797/22 - 2013 පෙබරවාරි මස 15 වැනි සිකුරාදා - 2013.02.15

*1797/22 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*எல். டி. எவ்பி 1/2011.*

**2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டம்**

*2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 30 ஆம் பிரிவின் கீழ் சுகாதார அமைச்சினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மைத்திரிபால சிறிசேன,
*சுகாதார அமைச்சர்.*

*சுகாதார அமைச்சு,*
கொழும்பு,
*2013, பெப்புருவரி 15.*

**ஒழுங்குவிதிகள்**

*இல. 1770/15 ஆம் இலக்கமிடப்பட்ட 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 8 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்டதுமான 2012 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, புகையிலை உற்பத்திப் பொருட்கள் (சுட்டுத்துண்டிடல் மற்றும் பொதியிடல்) ஒழுங்குவிதிகள் மீண்டும் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது.*

1. ஒழுங்குவிதிகளின் இல. 05 இல் "சிகரெட்டைக் கொண்டிருக்கும் ஒவ்வொரு சிகரெட் சிப்பம், பொதி அல்லது அட்டைப் பெட்டியின் இரண்டு பக்கங்களிலும் அச்சிடப்படுதல் வேண்டும் என்பதுடன் ஒரு சிப்பம், பொதி அல்லது ஒரு அட்டைப் பெட்டியின் மொத்த இடப்பரப்பின் எண்பது சதவீதத்திற்கு (80%) குறையாத இடப்பரப்பினைக் கொள்ளும் வகையில் அச்சிடப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "சிகரெட்டைக் கொண்டிருக்கும் ஒவ்வொரு சிகரெட் சிப்பம், பொதி அல்லது அட்டைப் பெட்டியின் முன்பக்கம் பின்பக்கம் இரண்டு பக்கங்களிலும் தலா முதல் மேற்பரப்பின் எண்பது சதவீதத்திற்கு (80%) குறையாத இடப்பரப்பினை கொண்டதாக அச்சிடப்படுதலும் வேண்டும்.".

2. 6 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளில் "அத்தகைய சிப்பம் பொதி, அட்டைப்பெட்டி அல்லது சுட்டுத் துண்டில் உள்ளடங்கியுள்ள புகையிலை உற்பத்திப் பொருளின் இயைபான ஆக்கக்கூறுகள் மற்றும் வெளியேற்றுகைகள், போமல்டிகைட் மற்றும், வேறு நச்சுப் பொருட்கள் ஏதேனும் இருப்பின் அவை உள்ளடங்கலாக "அத்தகைய சிப்பம், பொதி, அட்டைப்பெட்டி அல்லது சுட்டுத்துண்டு நிக்கற்றின் மற்றும் தார் உள்ளடங்கலாக" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

3. 7 ஆவது ஒழுங்குவிதிகளில் "உற்பத்தி ஆண்டு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "உற்பத்தி ஆண்டு மற்றும் காலாவதித் திகதி" என்னும் சொற்களை இடுவதன் மூலம் .

4. 10 ஆம் இலக்க ஒழுங்குவிதியை உடன் அடுத்து பின்வரும் புதிய ஒழுங்கு விதியைச் சேர்ப்பதன் மூலம்.

"11. இந்த வர்த்தமானி பிரசுரிக்கப்பட்ட திகதியில் இருந்து மூன்று மாதங்களுக்குள், ஒவ்வொரு புகையிலை உற்பத்திப் பொருளின் இறக்குமதியாளரும் இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கமைவாக ஒட்டிகளை (ஸ்ரிக்கர்) ஒட்டுவதன் மூலம் இணங்கியொழுகுதல் வேண்டும்.".